[2015 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

நெல் கொள்முதல் நிலையம்

*3702—**திரு. ஆர். சந்திரசேகர்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தொகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணப்பாறையில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கக்கோரி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை எதுவும் வரப்பெறாததாலும், மேற்படி பகுதியில் நெல் கொள்முதல் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இதுவரையிலும் ஏற்படவில்லையாதலாலும், இங்கு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.*

திரு. ஆர். சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வஞ்சகத்தைத் தகர்த்தெறிந்து வாய்மைதனைக் காத்து நிற்கும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி*

2015 மார்ச் 31]

அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது மணப்பாறை தொகுதி, முழுக்க முழுக்க விவசாயிகள் நிறைந்த தொகுதியாகும். இங்குள்ள விவசாயிகள் சம்பா காலங்களில் மணப்பாறை தொகுதியில் மட்டும் சுமார் 3,600 ஹெக்டேர் சம்பா நெல் சாகுபடி செய்கிறார்கள். அறுவடைக் காலத்தில் அவர்கள் தங்களுடைய நெல்லை விற்பதற்கு தனியாரை நாடுகின்றபோது விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. அதுமட்டுமல்லாமல், விவசாயிகள் கஷ்டப்பட்டு பாடுபட்டு உற்பத்தி செய்த நெல்லுக்கும் 15 நாள் அல்லது 1 மாதத் தவணையில் பணத்தைப் பெற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, விவசாயிகளின் பாதுகாவலராக விளங்கும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மணப்பாறையில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க முன்வருமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடப்பு கொள்முதல் பருவத்தில் டெல்டா மாவட்டங்களில் 1,394 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், பிற மாவட்டங்களில் 297 நெல் கொள்முதல் நிலையங்களும், ஆக மொத்தம் 1,691 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இதுவரை 11 இலட்சத்து 79 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக எழுபத்து ஐந்து கோடியே நாற்பது இலட்சத்து எண்பத்து ஆறாயிரம் ரூபாயும் இதுவரை மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு வழங்கப்பட்டிருக்கிறது என்பதனை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள், நெல்லை விற்பனை செய்வதற்கு ஏதுவாக, தேவைப்படும் இடங்களிலெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்துகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஏற்கெனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டத்தைப்

பொறுத்தவரை, திருச்சி மாவட்டத்தில், ஸ்ரீரங்கம் வட்டத்தில் 4 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 101 மெட்ரிக் டன் நெல்லும், முசிறி வட்டத்தில் 2 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 403 மெட்ரிக் டன் நெல்லும், தொட்டியம் வட்டத்தில் 2 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 16 மெட்ரிக் டன் நெல்லும், லால்குடி வட்டத்தில் 25 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 6,834 மெட்ரிக் டன் நெல்லும் ஆக, கூடுதலாக திருச்சி மாவட்டத்தில் 33 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலமாக இதுவரை 7,354 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், மணப்பாறை வட்டத்தைப் பொறுத்தவரை, இதற்கு முன்னதாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மணப்பாறை வட்டத்தில் எந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் தேவை என்று கேட்கிறாரோ, அந்த இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

திரு. ஆர். சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலேயே மணப்பாறையில்தான் Hulling Rice Mills அதிகமாக உள்ளன. வெளிமாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் அருகில் உள்ள ஸ்ரீரங்கத்திலிருந்து நெல் கொள்முதல் செய்து அந்த ரைஸ் மில்களுக்கு வழங்குகின்றார்கள். எனவே, மணப்பாறையில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்தால் அரசுக்கு போக்குவரத்துச் செலவு குறையும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மணப்பாறையில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

2015 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல்லை கொள்முதல் செய்கிறபோது குமராட்சி, காட்டுமன்னார்குடி, சிவாயம் மற்றும் பல இடங்களில் அளவுக்கு அதிகமாக, ஒரு மூட்டைக்கு இரண்டு கிலோ வீதம் கூடுதலாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்வது, பணம் கொடுக்கிறபோது ஒரு மூட்டைக்கு 20 ரூபாய், 25 ரூபாய் என பிடித்துக் கொண்டு பணம் கொடுப்பது போன்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என நான் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தருகிறார். கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 142 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அங்கு 45,000 மெட்ரிக் டன் அளவு நெல் மட்டும்தான் இதுவரை கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே ஏதேனும் தகவலைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இதனைக் குறிப்பிட்டிருக்கிறார். இதுபோல் எந்த இடத்திலும் நடக்கவில்லை. அப்படி அவர் கூறுவதுபோல் எங்காவது தென்பட்டால் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், வால்பாறை*

சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், உடையகுளம், கோட்டூர் போன்ற பகுதிகள் நெல் அதிகமாக விளையக்கூடிய பகுதிகளாகும். எனவே, ஆனைமலை, கோட்டூர் பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை நிரந்தரமாக அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை, கோட்டூர் பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த ஆய்வுகளின் அடிப்படையில், தேவைப்படும்பட்சத்தில், உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

97—

தொழில் வளம்

***53794—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதியை தொழில் வளம் மிகுந்த பகுதியாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள வினாவில், திருத்தணி தொகுதியை தொழில் வளமாக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது திருவள்ளூர் மாவட்டத்தினைச்